ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1799/15 - 2013 මාර්තු මස 01 වැනි සිකුරාදා - 2013.03.01
*1799/15 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டம்**

அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் துணை உறுப்புரையுடனும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் 3 உப பிரிவுடனும் 14 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் இந்தச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகள்.

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி.

கொழும்பு 01,
2013, பெப்புருவரி 28.

**ஒழுங்கு விதிகள்**

1. இந்த ஒழுங்கு விதிகள் 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்கு விதிகள் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. பின்வரும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பொருட்களை 2013, பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி நள்ளிரவிலிருந்து செயலுக்கு வரத்தக்கதாக எவரும் எந்த நாட்டிலிருந்தும் இலங்கைக்குள் இறக்குமதி செய்யக்கூடாது.

**அட்டவணை**

| நிரல் I<br>HS தலைப்பு | நிரல் II<br>HS குறியீடு | | நிரல் III<br>விவரணம் |
|---|---|---|---|
| 22.07 | | - | கனவளவுக்கு அமைவாக அற்ககோல் செறிவு 80% உம் அல்லது அதைவிடக் கூடுதலான அற்ககோல் உள்ள செறிவகற்றப்படாத ஈதையில் அற்ககோலும் எந்தச் செறிவகற்றப்பட்ட ஈதையில் அற்ககோலும் ஏனைய ஸ்பிறிட் வகைகளும் |
| | 2207.1 | - | கனவளவுக்கு அமைவாக அற்ககோல் செறிவு 80% உம் அல்லது அதைவிடக் கூடுதலான அற்ககோல் உள்ள செறிவகற்றப்படாத ஈதையில் அற்ககோல் |
| | 2207.20.10 | - | மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கமைவாக செறிவு நீக்கப்பட்ட ஸ்பிறிட் வகைகளும் |
| | 2207.20.90 | - | ஏனையவை |

3-659

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.